The members of the Upper House would be named by the crown of England as well as the Vice Roy. The Parliament would be as restricted as possible and only have to occupy itself with affairs of general interest : all special legislation being in the province of the assembled provincials.

On the other hand, the American Press which had in the beginning applauded this growing confederation has not received favorably the aristocratic tendencies adopted by the conferences of Quebec, to oppose the Democratic interests of the United States.

The latest news from New York is up to the 21st of October, and the situation of the armies, was not modified. Grant was waiting patiently for the termination of the Canal which would enable him to turn Fort Darling; and in the meantime he will continue to surround Richmond with an iron circle which is becoming smaller and smaller. If they succeed in cutting off all communication from the place they will reduce it by famine. Skirmishes continually take place between the armies. The 27th, Grant sent a reconnoitering Corps to the very defences of the army, and proved they were perfectly covered in their entrenchments.

In the Shenandoah valley, Sheridan gained on the 19th October an important victory at Cedar Creek, and followed up his adversary to mount Pacton, where the confederate General Longstreet replaced Early whose army is completely disorganized

From Georgia the news is very confused. General Slocum was still in Atlanta! Sherman had left the city to prevent Hood cutting off his communications with Washington! the Confedrate army is placed between Sherman and the city so as to bar his passage. The rebels seems to count on a success. They have sent the famous Beauregard to take the command of the army of Georgia, but Atlanta is well defended and is well supplied with stores of every kind. The fate of the Union is decided. What will the ballot have decided? Union or succession? Slavery or emancipation? Europe awaits the news with anxiety and the next steamer will bring it. The latest information induces us to believe in the victory of Lincoln.

The election of Lincoln would be the abolition of slavery and the maintenance of the Union more than this, it is peace ! for the South have not a man to call underarms, and has just decreed the enfiendment of colored men. In any way slavery is dead,and with slavery dies the only cause of discord in the United States. The great American Republic will arise from the struggle more compact than ever.

## ORIGINAL POETRY.

*"And thou art dead, so young and fair.",*

Lines suggested by the death of—during the recent prevalence of cholera at Kandy.

1 I was in the city of ancient kings,
  Where heathens ruled its state
Where sun and moon were worshipped things,
  And vot'ries stooped to fate.

2 Where power and might o'er ruled the day,
  The weak were trampled down,
And nought to comfort injury,
  Save mighty princes frown.

3 Around this seat the hills ascend
  And thickly wooded o'er,
The trickling stream its way doth bend
  Midst aromatic flower.

4 Which scents the air, as well the wood
  Of spicy scented tree
Which grows now wild where once there stood
  The palace of grandee.

5 Its valleys running between its hills
  Are green with nature's food,
Which sucks the earth ; its stem it fills
  Amidst its watery sea.

6 But here the marsh with sickly heat
  Sends deadly vapour high,
And fever with its trembling sweat
  Prostrates too soon to die.

7 The strong and weak—sad victims all
  Past cure, past help, past hope,
For ignorance with weighty pall
  Forbids with it to cope.

8 In such a time that fell disease
  That baffles all the skill
Of even those who are at ease
  In ailments slight or ill.

9 Which like the eagle at a swoop
  Descends with fatal blow
And leaves like blasted leaf to droop
  And lays the mortal low.

10 Which forces agonizing groans
  Of pains past endurance,
Which fills the air with stiffled moans
  Till death doth seal the glance.

11 In such a time, Oh, who can tell?
  The next the plague will smite,
And with its torture hideous, fell,
  Distort in death's last plight.

12 In such a time, a lovely one,
  Left fields and streams and trees,
With the stranger to sit alone,
  Alone and ill at ease.

13 She was of tender heart and frame,
  Her soul was full of good,
And fain would silent hide her name,
  And modest earn her food.

14 She had no father, mother dear
  Within whose breasts to hide
The sorrow that ne'er suffered cheer
  But let the sorrow bide.

15 She had no sister, nor brother's arm
  To raise defending her
From life's unwearied daily harm,
  And want and grief and care.

16 She was alone, and felt alone
  Without one cheering glance,
So save the constant cheerless moan,
  That told her state at once.

17 One only comfort left she loved
  And pressed it to her heart
Nought else in life her love had moved,
  With that she ne'er could part.

18 And what was that—her Bible true
  All else was false to her,
This was her sky cerulean ; blue,
  With this nought else was care.

19 And yet with spirit weak altho'
  The strength within her lay
She could not and cared not to know,
  Aught else with this her stay.

20 In many an hour of bitter want
  To it she flew with glee
And though of food she oft was scant
  This was her food surely.

21 And yet why should I say not one
  Pressed comfort to her soul
And with her Bible all alone
  She drank her hope in full?

22 There still remained her care to share
  A friend by Heaven sent
One to relieve her by the prayer
  Of hope against all want.

23 And need there was of him so true
  When struck with fatal dart
Down to the ground the plague her threw
  And slowly touched her heart.

24 Slowly, surely, but still it beat
  And still the friend was there
Her bed-side was his constant seat
  To watch and hope in fear.

25 Across her face the griping pain
  Expression threw and told
How fierce it strove her soul to gain
  For Satan dread and bold.

26 But through the torture cramped her limbs
  Her frame full of anguish
And though desease her feet benumbs
  And life near its finish.

27 A smile like sunshine radiates,
  With rays of heavenly hue
Her face, and sinfulness expiates
  My Gospel held so true.

28 And one sad prayer as life's last hour,
  Before her friend she raised
Who full of grief, yet felt the power
  Of goodness when it praised.

29 He joined in broken accents, when
  The quivering lips pronounced
Her prayers last words the blest Amen
  And then she life renounced.

30 Oh would all those, when left, alone,
  Had friends as true as he!
Who brave beside the enfeebled one
  Would sit and pray as free.

31 Ah then this world would tell the tale
  Of charity clear as day,
And then we would not sad bewail
  The ills against which we pray.

32 Let honour due to him be paid
  May he ne'er lonely find
The want of friends when lowly laid
  In body or in mind. R. S. EDLESTON.

Kandy, Ceylon, Nov. 18th 1864.

## LITERATURE.

*Female Beauty and Accomplishments.*

One of the greatest English Poets of modern days has remarked that "the proper study of man kind is man." The beauty and truthfulness of these words have invested them with a peculiar interest and commended them to the attention of every thinking mind. What is worthy of deeper thought and closer attention than Man, the master-piece of the Almighy's work of creation and the furnishing touch in the sublime picture of the world ! In his moral, physical and social character we see an evidence of the wonderful power of God, and at the same time an important and interesting subject for consideration.

Soon after the creation of man it was ordained by God that "for him to be alone it is not good." The Almighty knew that the vicissitudes and cares of this world, the difficulties attending the battle of life, were too great and too many to be borne by one single mind. Under such circumstances he created another to sympathize with him in his misfortunes, to rejoice at his successes, and to encourage him in his earthly career.

This appears to have been one of the grand objects in the creation of woman. In the state of blissful innocence where our first parents lived, choice was not allowed to man. God knew what was best calculated to render Adam's earthly pilgrimage, a happy one; and we find him presented with a companion to whose personal graces was added the crowning grace of humility. But the case is quite different at the present day. The earth has since the Fall been greatly populated; sin with its train of sorrows has entered into the world; and the nature of man has undergone an almost complete change. He must meet with something to induce him to lavish his affections on any one particular individual of the opposite sex. These qualities are so numerous and so well known that it seems unnecessary on my part to record them here, Among those things which qualify woman to be man's companion for life, those which come more particularly under our notice at this time are beauty and accomplishments. The former may be defined to be that harmonious blending of colours, and symmetrical proportion of parts which superinduce pleasure in the beholder. Under the term accomplishments are included the study of music, drawing, French, Italian, German and dancing. Edmund Burke, in his essay on "the sublime and the beautiful," attributes the cause of several passions as love, reverence, respect and quality which is called beauty.

H. F.

(to be continued)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்காபிமானி.

துன்மதிவருஷம் ௲௮௱௬௰௧ மார்கழி மீ ௰௨ உ.


## ORIENTAL BANK CORPORATION.

### விளம்பரம்.

### ஒறியேன்றல் வங்குச்சாலை.

இதன் உதவிச்சாலையொன்று சென்றமாதம் ௰௬ தி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து இப்பொழுது நடைபெற்றுவருகிறது.

நடப்படியான பணவைப்புக் கணக்குக்காரியங்கள் இப்பொழுது அதிற் தொடங்கப்படலாம்.

சேமத்திற்காய்க் கட்டும்பணங்கள் ஒருமாசம், இரண்டுமாசம், ஆறு மாசக்காலங்களுக்கு அவ்விடம் வைக்கப்படலாம். அப்படி வைக்கப்படும் பணத்திற்கு வருடமொன்றிற்கு முறையே நூற்றுக்கு, மூன்று, நாலு, ஆறுவீதம் வட்டிகொடுக்கப்படும். பணச்சேகரிப்பிற்காய் அந்தந்த இடங்களுக்குரிய கைச்சீட்டுகளும் ஏற்கப்படும்.

தலை ஸ்தானத்திலிருந்து இத்திரவியசாலையைச்சேர்ந்த சகல கிளைச்சாலையின் பேருக்கும், சென்னைத் திரவியசாலையைச்சேர்ந்த கொச்சியின் உதவித் திரவியசாலையின் பேருக்கும், ஸ்கொற்லண்டைச்சேர்ந்த தேசத்திற்கும், மாகாணத்துக்கும், வர்த்தகத்துக்குமடுத்த சகல கிளைத் திரவியசாலைகளின் பேருக்கும், அயரலண்டைச்சேர்ந்த மாகாணத் திரவியசாலைகளின் பேருக்கும் உண்டிகள் கொடுக்கப்படும்.

உண்டி மாற்றுதலுக்குரிய கழிவு முதலானகாரியங்களின் விவரங்களை இத்திரவியசாலையிற்றானே தெரிந்துகொள்ளலாம்.

ஆர். வி. டன்லோப், உதவிக்காரியகர்த்தர்.
எ. எவ். வில்ஸ்வோட், சம்பிரதிக்கணக்கர்.



### நூறுபவுண்டு நன்கொடை!!!

இந்தியாதேசம், லோங்தோனகரம், சீனதேசம், கண்டிநகரமுதலிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சாட்டர்பத்திரம்பெற்ற வியாபாரவிஷயத்திரவியசாலை கண்டிநகரில் சிறுப்புவாயிருந்த, சி. அரியகுட்டி என்பவரைப் பிடிக்கக்கூடிய அறிவித்தலை இன்றுதுவக்கம் ஒருமாதத் தவணைக்குள் இதன்கீழ் கையொப்பம்வைத்திருப்பவரிடம் கொடுக்கக் கூடியவர்களுக்கு மேலைக்கண்டிருக்கும் நூறுபவுண்டு நன்கொடையாகக் கொடுக்கப்படும் என்பதை இத்தால் அறிக.

இங்ஙனம் எ. வி. லெமார்ச்சன். மானேசர்.
கொழும்பு ௲௮௱௬௰௧ மார்கழி மீ ௧ உ


### புதுப்பஞ்சாங்கம்.

துன்மதி ம் வருடப் புதுப் பஞ்சாங்கம் வட்டுக்கோட்டை வித்தியாசாலை உபாத்தியாயருளொருவராகிய Mr. J. P. Cooke. குக் என்பவரால் கணிக்கப்பட்டு யாழ்ப்பாணம் சிறுபுத்தகசங்கத்தவரால் பிரசுரமாக்கப்பட்டன. இப்பஞ்சாங்கம் எவரும் விரும்பப்படத்தக்கதான பல விஷயங்கள் அடங்கியிருப்பதால் அது சகலருக்கும் உபயோகமாயிருக்குமென்று நம்புகிறோம்.

### J. Young Esq.—இயங்குத்துரை.

எம்முரைச்சேர்ந்த காட்டுத்துரைமாரில் ஒருவராகிய இவர் சிலநாட்களுக்குமுன் கண்டிநாட்டில் தேகவியோகமானார் எனக்கேள்விப்படுகிறோம். இவர் தேகசவுக்கியத்திற் சற்றேனுங் குறைவுள்ளவரல்லர் மனுஷனுடையவாழ்வு என்ன அதுவெளியிலேயிருக்கிறபுல்லின்பூவுக்குச்சமன் அல்லவா. இவர் தமது கடமைகளைச் சரிவரநடத்தினார் எனக்கேள்விப்படுகிறோம்.

### Shavagachery Magistrate.—சாவகச்சேரிமஸ்திருத்து.

இவர் உத்தரவின்பேரால் கொழும்பிராசதானிக்குப் போகிறார் எனவும் இவர் வரும்வரைக்கும் இவரிடஞ்செல்பித்துரை (Selby Esq ) பராபரிப்பார் எனவுங்கேள்வி.

### நளபாகம்.

நெருப்பின்றிப் போசனஞ் சமைத்தல்.

பிராஞ்சுதேச வித்தியாசங்கத்தவருளொருவர் நெருப்பின்றிப் போசனஞ் சமைக்கிறதற்கு ஒரு வழிகண்டுபிடித்து அதைப் பத்திரத்திற்றீட்டி சங்கத்தார் சமுகத்தில் வைத்தனர். அதின்பொழிப்பாவது, சமைக்கவேண்டிய பதார்த்தத்தை ஓர் கறுப்புப்பாத்திரத்திலிட்டுக் கண்ணாடிகளினால் முழுதும்மூடி வெய்யிலில் வைக்கத் தண்ணீருமுண்டு பதார்த்த மும்பாகமுமாகும். இது நெருப்பினாற் சமைத்த பதார்த்தத்தைப்பார்க்கிலும் அதிக சுவையுள்ளதாயிருக்குமாம். எம் நாட்டுப் பெண்களுக்குச் சமையற் செலவைச் சுருக்கத்திலேமுடிக்க இதொரு உபயோகமான புதினச்சங்கதியாயிருக்கும்.

### ஓர்நூதனம்.

நாம் இப்பூமியின்கண் பாவியாய்வந்து சென்மித்து வெகுகாலமாகின்றன. இன்னும் வேம்பிலே மதுரமான நீர் எடுக்கலாமென்பதைக் கண்டதுமில்லைக் கேட்டதுமில்லை. சிலநாளைக்குமுன்னோர் வெங்கலப்புழுகர் என்னிடம் இந்த நூதனச் சங்கதியைக் காவிக்கொண்டு வந்தார். ஆவரங்காலுக்குச் சேர்ந்த ஓர்வேப்பமரத்தில மதுரமான நீர் பாய்கிறதெனவும், அதனை மருந்திற்குச் சேகரித்து வைக்கும்பொருட்டு பெரும் பீலிப்படையைக் கட்டி ஏந்துகிறார்களெனக் கேள்விப்பட்டு அங்ஙனம் சென்று பார்த்தேன். வெங்கலப்புழுகர்சொன்னது ஏறக்குறையச் சரியெனக் கண்டேன்.

இப்படிக்கு,
நான்றான்.

### மந்திர எத்தன் தந்தரவித்தை.

ஐயா, காலங்கலிபிரண்டு சனங்கள் பிள்ளைப்புகுக வளமில்லாமல் முட்டுப்பட்டு அஞ்சாசித்தண்ணீர் எங்கேயென்று ஆர்வாயைப்பெண்கிலும் பார்த்து வயிற்றை எக்கி மனசுகலங்கிப் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருக்கும்போது இதுதான் தருணமென்று வியாபாரிகளும் செட்டி நட்டர் தட்டாணிலே தட்டான்கட்டம் ஊமேலே என்றதுபோல முழுக்கொத்தைமழுக்கிக் குறுக்கிவிற்கிறார்கள். அதையும் மனதிலடக்கிக்கொண்டு வெள்ளாண்மையிலேயும் ஊர் செழிக்கும் பஞ்சம்போகும் பசிதீரும் அஞ்சாமூனைக்கு இந்தஇடத்தில் கிடந்து களித்த போவோம் என்றிருக்க அதவும் இபபெடிபொன்னிபக்கை என்றாற்போல காய்ச்சித்தோய்ச்சு நாய்க்குக் கொடுத்தவன் சிலமாய் வெய்யில் காந்திள டுத்துப்போட்டது. போரட்டும் அசலங் குறையும் சீனமுங்குறையுமோ படைத்தவன் படிபோடுவனென்று எண்ணியிருக்கும்பொது பேயும் பிடிக்குது இதென்ன அபிப்பிராயம் இதற்கு ஏதாகிலும் மருந்தை மாதிரத்தைச் செய்விப்போமென்றெண்ணி மந்திரவாதிகளைத் தேடிவருங்கால் மட்டைக்களப்பிலிருந்தொருவர் தட்டுக்கெட்டு வந்திருக்கிறாரெனக் கேள்விப்பட்டு அவரை அழைத்துக்கொண்டுபோய்க் காட்டமுன் அவரிலிருந்தெழுந்த பேயும் முந்தினபேயும் ஒன்றுடனொன்று மல்லுக்கட்டிக் கடிபிடிப்பட, யானையும் யானையும் முதுகுறைஞ்ச இடையிலிருந்த கொசுகு நெரிந்தாற்போல இரண்டுபேயும் தின்றுடும் தன்பக்கற ஆள் சாகவேதுவானதுவாயிருக்க அதைக்கண்டநாங்கள் இதென்ன அபிப்பிராயம் பனையாலைவிழுந்தவனை மாடேறிமிதித்த பாவனைபோலிருக்குதே என்றெண்ணி மந்திரவாதியிடம்ஆவலோடு காட்ட அவரும் வெந்தவீட்டிற் பிடுங்கின தறுதி இதுதான்தருணம் எனநினைந்து இந்தப்பேய் மந்திரத்துக்கெடுபடாது வேறேதாகிலும் பிரயோகஞ்செய்யவேணும் நீங்கள் என்னுடைய பணப்பேயை அகற்றுங்கோ நான் உங்களுடைய மனப்பேயையகற்றுகிறேனென்று பொருத்தனைபண்ணிக்கொண்டு அகற்றத்தொடங்கினவிதம் வெகுவெடிக்கைதான். அந்தவேடிக்கையைக் கூடநின்று பார்த்தவர்களுக்கல்லோ தெரியும். உங்களுக்கும் அதிற் சிலவற்றைச் சுருக்கிச் சொல்லுகிறேன். மந்திரவாதி நாங்கள் கொடுத்த பழங்காய்களையெல்லாம் வஞ்சகமின்றிப்பரப்பி முடிவில் தான் செத்தவனைப்போற் கிடக்கிறேனென்றும் சவத்திற்குச் செய்யவேண்டிய கட்டுகளைமாத்திரம் தன் தம்பியைக்கொண்டு செய்வித்து எடுத்தல் சுமத்தல் கட்டையில் வைத்தல் கொள்ளிவைத்தல் முதலான கிரியைகளை நீங்களேசெய்துபோட்டு எல்லாரும் தூரப்போங்கோ என்மந்திரவித்தையினால் நான் தப்பி வந்துவிடுகிறேனென்று சொல்ல நாங்களும் அந்தப்படி செய்ப கடைசியாய் அவன் கொண்டுபோன கோழியையுந் திருகி தன்தம்பி லகுவாகக்கட்டின கட்டையும் அவிழ்த்து அட்டகாசம்பண்ணி கொண்டு எங்களண்டைவந்து எங்களையும் அனுப்பிக்கொண்டுசுடுகாடுவிட்டு வீடுவந்துசேர்ந்தோம் மற்றநாள் மந்திரவாதிவிட்ட பேயும் அகன்றுபோக ஆளும் சுகமாய்விட்டது. மந்திரவாதி பொருத்தனைப் பணந் தராவிடில் அப்பேய் திரும்பவும் வருமென்கிறார். மறுபடியும் அப்பேய் வருமானால் ஐயா பிளிச்சல்மாங்காயுந் தின்று இளிச்சவாய்ப் பட்டமுங் கட்டினாற்போலாகுமே. இன்னும் இரண்டொருஇடத்திலே இவருக்கும் பேய்க்கும் பார்வைநடக்குது. நல்ல இந்திரமயேந்திர சாலவித்தைக்காரன்தான்.

இங்ஙனம், ஓர் சண்டிருப்பாயான்.

பத்திராதிபரே, அம்பத்திரிகையொன்றில் தில்லைஅம்பலவரெனக்கையொப்பமிட்ட ஒருவர் தமது சந்தேகங்களை நிவர்த்திசெயற்காக வினவிய கந்தப்புராணம் வள்ளியம்மை திருக்கலியாணப்படலத்தில், நெட்டிலைவாளிதன்னை நேரிலாதய்மேலோ? அல்லது, நேரலர்தய்மேலோ வென்னுஞ் செய்யுட்கு இசைவில்லாத ஓர் உரையைப் பொருந்துமெனவும், இலக்கணமெனவும் (சாந்துப்பெட்டியென்றுன்னிப் பாம்புப்பெட்டியான வாறுபோல) சில உரைகளைப் பொழிந்து, தம்பெயர்மறைத்துப் பவுராணிகரென்னும் பட்டமுங்கட்டிப் புகுந்தனர். பகைவராகி எனவும் நேராராகிஎனவும், எதிர்ப்பவராகாதஎனவும், உபமேயமாகாதஎனவும், உபமானமில்லாதஎனவுங் கூறினர். கூறியவாறு, எதுகிதார்த்தமெனும் வினவிற்குத் தகுந்தவிடைதான். கடவுள் வேங்கையும், விருத்தனுமாய்த் தோன்றுளி, இவர் சுவாமியென யூகியாது சுவாமியினது சொயம்புருபத்தைக் கண்டு மகிழ்ந்தொருங்குபட்டவர், வேடர்களால் வளர்க்கப்படுபவராகிய தம்மைத் திருடினர்க்காய் நேராராகியெனக்கூறியார். இவை பௌராணிகரது விபரீதம் ஆதலின் நேராராகியென்னுமுரை பொருந்தாவாம். பகைவரெனக்கொள்ளின் (நிகண்டுமக்கட்பெயர்த்தொகுதி) நிஉம் பாட்டிலிருந்தறிக. நேராராகியென்பதனையிட்டே அங்ஙனம் பெயரான. இனி வள்ளிநாயகியார் குறிப்பு நேரிலர் என்பதே அதனைக் கட்டழவுடைய செவ்வேள் கருணைபங் கடலின்மீது, பட்டதுபட்டலோடும் பைந்தொடிபதைத்துச்சொல்வாள், என்னும் முன்னர்ச்செய்யுளாலறிக. இதைக்குறியாது "விளைமுற்றே" என்னுஞ் சூத்திரவிதிபால் பொருளுரைத்தமை, அவலைநினைந்து உரலை இடித்தாற்போலும் ஆதலிற்தோன்றிற் புகழொடுதோன்றுக, அஃதிலார் தோன்றலினதோன்றாமைநன்று. இவர் "உலகத்தார் உண்டென்பதில்லென்பின்வையத் தலகையாய்வைக்கப்படும்" என்றாற்போல உலகத்தில் வழங்கிவரும் பண்டைநூல்வழக்கைப் போக்கிவிடுவார்போலும். சொற்பொருட்டிறமறியும்படி நல்லைநாதபண்டிதரைச் சோதனைசெய்த சங்கரபண்டிதரது மாணாக்கரதுகேள்விகள், அழிபழியிலட்டுப்பழித்தாயவாறு பிழைபட்டுப்போக, அக்கோவிலிலிருந்த சங்கரபண்டிதரே நேரலரெனத்திருத்த, பண்டிதரைக்குறியாது மாணாக்கர்களினாற்றுக்குண்டு இடர்ப்பட்டனரென்கை "அவையறியார் சொல்லன்மேற்கொள்பவர்சொல்லின், வகையறியார்வல்லதூஉம்இல், ஆதலின் நீங்குவர்தடையுமாறும் நன்மைதான்சேருமாறும் தாங்கள் செய்வினையினாலே தத்தமக்காவதல்லால் ஆங்கவைபிறரால்வாரா என்பதனை உணர்க. ஈங்கள் சங்கரபண்டிதர் சைவப்பிரகாச சங்கமென்று ஓர் அரும்பெருஞ்சங்கம் வாரந்தோறும் வைக்கிறதெனக் கேள்வியானோம். அதிலும் அவர் தமது கெட்டித்தனத்தைக்காட்டத் துவங்கினார்போன்றும்.

இப்படிக்கு, ஓர் மட்டுவிலான்.

பத்திராதிபர்க்குவந்தனம் பத்தி முத்தி பாப்தந்தனம்,

ஐயாவே, நம்மூர் வேளாளதுரைங்கள் இவ்வருஷமாகுதல் செந்நெல்விளையும், தானியம்மலியும், கண்டுகாலி தழைக்கும், ஊர் செழிக்கும், நரர் மனக்குறைச்சலின்றி வாழ்வார் எனப் பலகாலும் உத்தேசித்திருந்தும் மழையின் குறைவினால், மனத்திற்றுக்குண்டு இடர்ப்பட்டார் இதுவே தகுந்த சமயமென நம்மூர்நெல்லுவியாபாரிகள் நினைந்து எல்லாரும் ஒத்து உடன்பட்டு நெல்விலையை முக்கித்தக்கி முப்பதுபணம் ஆக்கிப்போட்டார்கள். இவர்கள் கொடுமையோ பொறுக்கக்கூடாது. மழைகுறையவந்தது என்னத்தினாலெனில், வாடைக்காற்றுமோதி அடிக்க, மழைமுகில்களெல்லாம் அத்தினால் அடியுண்டு கொழும்புமாநகரம் முதலிய தென்தேசங்களிற் தாரைதாரையாக வருஷித்ததெனக் கேள்வியானோம். வேளாளரும் "மழையேபயிரைநம்பி வேளாண்மைசெய்து மனஞ்சலித்து முளைக்கட்டி முப்புரம்பூத்து முளைத்தெழும்பிக் களையெடுத்துக் கதிர்வாறமுட்டங் கலங்கவைத்தாய் மழையேயுனைநம்பலாமோ செந்தூர்க்கதிர்வடிவ மாப்பிளையே" என்று முறுமுறுக்கிறார்கள். ஆரோ ஒருவன்வந்து நாயிந்தே மழைஇவ்வாண்டு வேச்சுப்போச்சே, வயலெல்லாம் குத்திபாஞ்சுபோச்சே போனாண்டு இக்காளவாதி மழைபாச்சினும்பெய்தது, இம்முறை அந்துக்கூடவில்லை, உள்ளநெல்லையும் மூன்று துரைமாராம், ஞாயிற்றுக்கிழமையண்டுவந்து உளக்கிப்போட்டானுகள், ஏன் இவனுகள் இன்னைக்கு வந்தானுகளொண்டேன், வெட்டையாடப்போகிறானுகளெண்டான்கள். நாயிந்தே இவ்வாண்டு கஞ்சிக்குக்கூட வழியில்லாமல் பொச்சே எப் [illegible] சமக்காரன் வானத்தை அண்ணாந்துபார்த்து மழை இந்நாட்களில் பெய்யும் என்கிறார். இவர் தீர்க்கதரிசனம்பண்ணுவது நாய் வானத்தைப்பார்த்துக் குலைப்பதுபோல இருக்கின்றது.

பத்திராதிபரே,

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே உயர்வொப்பின்றி விளங்காநின்ற தமிழ்வழங்குந் தேயங்களிலொன்றாகிய சோழநாட்டிற் சிறந்து விளங்கும் மகா புண்ணிய க்ஷேத்திரமாகிய சிதம்பரதலத்தில், கார்த்திகை மீ ௨௮ உ சுக்கிரவாரோதய சுபமுகூர்த்தத்தில் குரு லிங்க சங்கம பத்திவைராக்கியத்தினும், தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் "கற்க கசடறக் கற்பவை கற்றபினிற்கவதற்குத்தக" எனத் திருவாய் மலர்ந்த திராவிட வேதமாகிய திருக்குறளென்னும் இலக்கணத்திற்கிலக்கியமாய்க் கல்வியறிவொழுக்கங்களினுஞ் சிறந்தவராயும், இருமரபுந் தூயராயும் விளங்காநின்ற யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீமத் ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களால், சைவப்பிரகாச வித்தியாசாலையெனப் பெரிய கல்லூரியொன்று தாபிக்கப்பட்டது. அந்நேரம் அவ்விடத்தில் அநேக பிரபுக்களும் புலவர்களும் வந்து கூடினர். கூடியவப்பிரபைகளுடைய உளங்கள் களிகூரக் கலைமகளே தாமொரு பெண்வடிவமாக விருத்தற்குதியன்றென நினைந்து, பூவுலகிற் புருடவடிவமெடுத்தவதரித்தனைய நாவலரவர்கள் வாசாலமாய்ச் சொற்சுவை பொருட்சுவை நயம்பயப்பப் பொழிந்த பிரசாரமாகிய அமிர்த தாரை அவர்களுடைய செவித்துவாரமடையானுள்புக்குப் பூதிகங்களைக் குளிரும் வண்ணஞ்செய்தது. அதன்பின் நாவலரவர்கள் பிரசாரத்தை முடித்தனர். அதுநிற்க,

இவ்வாறு தாபிக்கப்பட்ட கல்லூரி எதிர்காலத்தில் வறியராய்க் கல்விகற்கவரும் மாணவகருக்கு அன்னவஸ்திரங் கொடுத்துக் கல்விகற்பிக்கவும், மற்றை மாணவகருக்கு அவையின்றிக் கல்விமாத்திரமே கற்பிக்கவும் இயற்றப்பட்டது.

இவ்வாறெவராலுமியற்றற்கரிய பெரு முயற்சியை தன் நயங்கருதாது உலோகோபகாரமாக இயற்றும நாவலர், அத்தலத்திற் தமிழ்ப் பாடசாலைகளனேகமிருப்ப இஃது நவமாய்த்தாபித்தது எற்றுக்கெனின், நூல்களைக் கற்பிப்போர் மாணவகருக்கு நூல்களை முறையே கற்பியாது முறைபிறழ்ந்து கற்பிக்கின்றமையானும், எம்மொழியினுமினிய தமிழ்மொழி நாடோறுந் தேய்பிறைபோலத் தேய்ந்திறுதலானுமென்க. இதுநிற்க,

"தூங்குசிறைவாவலுறை தொன்மரங்களென்ன வோங்குகுலமையவதனுட்பிறந்த வீரர் தாங்கல்கடனாகும்" என்றான்றோர் மொழிந்தவாபோலத் தாம் மேற்கொளும் நன் முயற்சிக்குப் பல இடர்கள் நேரிடினும் அவ்விடர்கட்கே நொந்தலமாய்த் தாம்மேற்கொண்ட முயற்சியை விடாது நிலைத்து நின்று நிறைவேற்றுமவர்க்கு அநாதி முத்த சித்துருவாகிய பதி துணைசெய்யும்பொருட்டு வேண்டுகிறோம்.

இங்ஙனம், புதினப்பிரியன்.
இரத்தாட்சி ௵ கார்த்திகை மீ ௩௰ உ.

### உப்புக்குத்தகை.—Salt Rent.

அபிமானியே,

பின்னால்வருஞ் சங்கதிகளைத் தங்கள் பத்திரிகையின் ஓர் கோணத்திற் பிரசுரஞ்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தமாதம் ௨ ந் திகதி சுடும் ஆண்டின் இக்குத்தகையை எமது ஏசண்டத்துரை அவர்களால் விற்கப்பட்டது. சென்றவருடத்தில் தொகையினுங் குறைவாயிருந்தபடியால் முடிவுகட்டாமல் நிறுத்தியிருக்கிறாரெனக் கேள்வி; உப்புக்குத்தகைகாரரும் இவர்களின கீழ் உத்திபோகத்தருஞ் செய்யும் அநியாயங்களைப்பற்றிச் சொல்வதற்கு இதுவே தகுந்த சமையமெனவெண்ணி அவற்றிற் சிலவற்றைச் சொல்லுகிறேன்.

௧. குத்தகைகாரரால் பற்பல சந்தைகளில் உப்பு விற்பனவுபண்ணும்படி நியமனம்பெற்றோர் செய்யுந் தந்தரங்களை முற்றுகக்கண்டுபிடித்தல் மிகவும் அரிது. அரசாட்சியாரால் கொடுக்கப்பட்ட சரியான படிகளை மறைத்துவைத்துக்கொண்டு தேய்ந்தநிறையில் அதிகங்குறைவானபடிகளைப் பாவிக்கிறார்கள். இப்படிச்செய்கிறது எப்பொழுதுமல்ல, பெண்பிள்ளைகளுஞ் சிறுவருங் கொள்வனவுபண்ணும்பொழுதெல்லாம் அப்படிச்செய்கிறார்கள். அரைப்பேணிசுக்குக் கீழ்ப்பட்ட எந்தத்தொகைக்கு விற்றாலும் தராசுபடி பாவியாமல் கைமதிபத்தாக்கு விற்கிறார்கள். இதகாரியத்தைப் பரிசோதனைபண்ணுகில் சாயந்தரங்களில் இவ்வூரிலிருக்கும் எந்தக் கடையிற்போய்ப் பார்த்தாலும் விளங்கும். இப்படி உப்புவிற்போர் மேற்சொல்லிய தந்தரங்களைச்செய்வதால் ஒருநாளைக்கு நாலுசிலினுக்குக் குறையாத நயமுண்டு. இப்படியானால் வருஷமொன்றுக்கு எவ்வளவென்று பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளிடங்கேட்டால் சொல்லுவார்கள். இதினால் அல்லவோ இவர்கள் குத்தகைகாரருக்குங் கீழ்க்குத்தகைகாரருக்கும் அதிகதொகையான இறும் கொடுக்கிறார்கள். இது காரியங்களைப்பற்றி அனேக முறைகளில் நம்பத்திரிகை வழியாய் அறிந்திருந்தும் அரசாட்சியாரின் உத்தியோகத்தர் யாதாமொரு விசாரணை செய்யாதிருந்தல அதிசயத்தின்மேல் அதிசயம். எங்கள் ஏசண்டத்துரை அவர்கள் உப்புக்குத்தகையை அமானியில்விட்டால் வெகுநயமென எண்ணுகிறேன்.

இலங்காபிமானியின் எடிற்றர் அவர்களுக்கு வந்தனந்தனம்.

ஐயாவே, இந்தமாதம் ௰௩ ந் திகதி சாயந்தரம் வண்ணார்பண்ணையைச்சேர்ந்த செட்டித்தெரு வெஸ்லியன் அங்கிலேய திராவிட வித்தியாசாலையில் வழமைப்பிரகாரம் நடந்துவருஞ் சுதேச சுநோபகார மங்கலவாரச் சங்கங் கூடிற்று, அத்தருணம் மத்திய வித்தியாசாலையின் இரண்டாம் உபாத்தியாயராகிய ஸ்ரீ ஸ்ரீ லைமன் (Mr. A. Lyman) என்பவரெழுந்து பதி சுயம்புவாயிருக்கிறாரென்றும் மனிதனைச் சுத்தநிலையிற் கடவுள் படைத்தனரென்றும், அவன் அந்நிலையில் வழுவினனென்றும், அவனை யீடேற்றும்பொருட்டுக் கருணைகூர்ந்து தமது திருச்சித்தத்தை ஆகமவழியாய் அருளினரென்றும், தமது ஒரேசுதனை யீந்தனரென்றும் பீடிகையிட்டுத் திருட்டாந்தங்களோடு அதி மதுர விசித்திரப் பிரசங்கம்பண்ணினார். இவ்வரிவைப்பெரிய யாவரிய மொழியின் ஞானமிர்தசாரத்தை யுண்டு தேக்கித் ததும்பாது சாரத்தை வழுவவிட்டுக் கசாழத்தைக் கவ்விய நெய்யரிபோலும் தெளிந்த நீரபருகித் தாகசாந்திசெய்யாமலும் ஏனையுயிர்வற்கமுண்ணவிடாமலும் சேறுமேலெழத் தடாகநீரைக் கலக்கிய பால மயிடாசுரனொத்தவொருவர் தன் குணியவிசேஷத்தைக் காட்ட விரும்பியோர் கடாக் கடாவினார். அக்கடாவை உபாத்தியாயர் அங்கீகரிஞ்செய்யாது கிரமப்படி வரின் விடையீகுவோமெனவாக்குச்செய்து தாமாரம்பித்த விஷயத்திற் தாழாது விற்பன்ன விவேகத்துடன் முடித்தனர். இவ்வாரம் சைவப்பிரகாசவித்தியாசாலையிற் சிலவாரங்களாகப் பரமதகண்டனமென நாமஞ்சூட்டி நடைபெற்றுவந்த விரோதசங்கஞ் சமாப்திபெற்றது. சுயமதஸ்தாபன சங்கத்தவர்க்குங் காலங்கண்ட கலைவல்லோர் காலசக்கரங்காட்டிச் சாதகங் கணித்திருக்கின்றனர்.

நல்லைக் கந்தன்.

Edited by C. W. CATHERAVALUPULLY and Printed and Published by N. STRONG at the Press of RIPLEY & STRONG Manepay, Jaffna.

C. W. Catheravalupulle

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org